# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1804/18 - 2013 අප්‍රේල් මස 03 වැනි බදාදා - 2013.04.03

*1804/18 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

### *1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம்*

*அரசியலமைப்புச் சட்டத்தின் 44 ஆம் உறுப்புரையின் (2) துணை உறுப்புரையுடனும் மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவுடனும் 14 ஆம் உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

கொழும்பு,
*2013, மாச்சு 31.*

ஒழுங்குவிதிகள்

1. இந்த ஒழுங்குவிதிகள் 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 2013, மாச்சு மாதம் 01 ஆந் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்தல் தடைசெய்யப்பட்ட கலவை வகைப்படுத்தல் குறியீட்டின் (HS Code) கீழான ஈதையில் மதுசாரம், 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் வெளியிடப்படுகின்ற அனுமதிப்பத்திர அதிகாரத்தின் கீழ் இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

3. மேற்படி ஒழுங்குவிதி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இறக்குமதியாளர்களுக்கு இந்த அனுமதிப்பத்திரமானது பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழே வழங்கப்படுகின்றது:-

(i) மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழ் மதுவரி அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்;

(ii) இறக்குமதியாளர்களினால் உற்பத்தி வரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, வருமான வரி உள்ளிட்ட காலத்திற்குக் காலம் விதிக்ககப்படுகின்ற ஏனைய வரிகள் உரியவாறு செலுத்தப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(iii) மதுவரி ஆணையாளரினால் காலத்திற்குக் காலம் உள்ளூரில் கொள்வனவு செய்வதற்கு செய்யப்படும் நியதிகளுக்கு உட்படுதல் வேண்டும்;

(iv) இறக்குமதி செய்யும் ஈதையில் மதுசாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரமுடையதாக இருத்தல் வேண்டும்.

4. மேலே 2 ஆம் மற்றும் 3 ஆம் ஒழுங்குவிதிகள், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட வியாபார தொழில் முயற்சிகளுக்கும் ஏற்புடையதாகும்.

*04-510*




*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*